www.padippakam.com

# தமிழ் ஈழ விடுதலை இராணுவம்

## THAMIL EELAM LIBERATION ARMY

## களைபொறுப்பு

அன்பான தமிழ் மக்களே

நமக்கென்றொரு தாயகத்தை அமைத்திட, நமது விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கிற இந்நேரத்தில் தனியே சிங்கள ஸ்ரீலங்காவுடன் மட்டுமின்றி சர்வதேச வல்லரசுக் கூட்டணியான அமெரிக்க ஏகாதிபத்தியம் இஸ்ரேலிய சியோனிஸ்டுகள் தென்னாபிரிக்க சோவினிஸ்டுகள் ஆகிய உலக பிற்போக்குத் தளங்களின் மொத்த வடிவங்களுக்கெதிராகவும் போராடிக் கொண்டு இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இது மிகப்பெரியதொரு இக்கட்டான அசாதாரண சூழ்நிலை என்பதை உலகநாடுகள் அவதானித்து வருகின்றன.

இவ்வேளையில் நம் மத்தியிலேயே ஒற்றுமையின்மை காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் போன்றவையும் நிகழ்ந்த வண்ணம் இருப்பதும் நம் மத்தியில் புரையோடிப் போயிருக்கும் புண்கள் எதிரியை எதிர்த்து போராடுவதை விட மிகவும் கஷ்டமும் அபாயமும் நிறைந்ததாகவே மேற்குறித்த அவலகரமான அவமானபடத்தக்கதான எண்ணங்கள் அமைந்துவிட்டன. நண்பன் யார் எதிரியார் என்று தெரியாத நிலைப்பாட்டில் தமிழீழ விடுதலைப் போராளிகள் வருந்த கூடியளவுக்கு நிகழ்ச்சிகள் நடந்து வந்துள்ளன.

எமது இயக்கத்தின் முக்கிய தோழர்கள் சிலர் அண்மையில் நாச்சிமார்கோயிலடியில் வைத்து சிங்கள ஸ்ரீலங்கா அரசு கூலிப்படையிடம் காட்டிக் கொடுக்கப்பட்டனர். இது மிகவும் ஆச்சர்யப் படத்தக்கதாக நடந்தேறியது இது சம்மந்தமாக எமது இயக்க தோழர்கள் மத்தியில் சந்தேகம் உருவானதன் விளைவாக இயக்க முக்கியஸ்தரான கூச் என்பவரை இயக்கத்தின் சாதாரண உறுப்பினர்கள் விசாரித்ததில் அவர் சில திடுக்கிடும் உண்மைகளை வெளியிட்டார்

தோழர்கள் கைது செய்யப்படுவதற்கு காரணம், **ரூபிளான் சுந்தரானந்தன்** (சேகர்) என்பவர் தீட்டிய திட்டம் எனவும் அதற்கு தானும் உடன்பட்டதாகவும் அவர் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்தார். அத்துடன் சில பிற்போக்கு வாதிகளின் பங்களிப்பும் இதில் இருந்ததாக தெரிய வந்துள்ளது. அரசு கூலிப்படைக்கு காட்டிக் கொடுக்கப்பட்ட எமது தோழர்களின் மீது அன்பு கொண்ட சாதாரண தோழர்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தாங்களாகவே இந்த விசாரணையும் தண்டனையையும் நிறைவேற்றினர். இதற்கு காரணம் **7பேர்** கொண்ட எமது இயக்க நிர்வாகம் சீரற்றதாக இருந்தமையே என நாம் ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளோம் ஏனெனில் **7பேரில்** இருவர் பிடிபட்டனர், இருவர் அந்நிய நாடொன்றில் இதுவும் எமது தோழர்களின் தான்தோன்றி தனத்துக்கு ஒரு காரணம்

மேலும் விசாரணையின் போது பணயக்கைதிகளை பிடித்து ஏன் கொலை செய்தீர்கள் என்று கேட்டதற்கு சிறையில் இருக்கும் தோழர்களை அரசாங்கமே உடனடியாக கொலை செய்து விடவேண்டும் என்பதற்காகவே செய்ததாகவும் குறிப்பிட்டார் தோழர் கூச். எவ்வாறு இருக்கிறது பிடித்துக் கொடுத்தது மட்டுமின்றி சிறையினுள்ளேயே தீர்த்து கட்டிவிட வேண்டும் என்பதில் அவர்கள் கொண்டுள்ள உறுதி. சவுண்ட் எஞ்சினியர்ஸ் ஸ்தாபனக் கொள்ளை யாழ் ஐக்கிய வியாபாரச்சங்க முகாமையாளரது கொலையும் கொள்ளையும் (850 ரூபாவுக்காக கொலை) பொதுமக்களிடம் **75 000 ரூபா** பெறுமதியான நகைகளை கொள்ளையடித்து காஸ்ரோவை மீட்டெடுப்பது என்பனயாவும் இயக்க ரீதியானதல்ல இயக்கம் எடுத்த முடிவும் அல்ல. சில தனிப்பட்டவர்களது செயற்பாடுகளே. இதில் சம்பந்தப்பட்ட மேலும் சிலரை விரைவில் அம்பலப் படுத்துவோம். இவையாவும் தலைவர்கட்கும் மூடி மறைக்கப்பட்ட விஷயங்கள்.

காலஞ்சென்ற எமது ஒப்பற்ற தலைவர் **ஒபரோய் தேவனால்** ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் பல்வேறு தடைகளையும் தாண்டி முன்னேறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக "**தமிழீழ விடுதலைப் புலிகள்**" எமது தலைவரை அநியாயமான முறையில் படுகொலை செய்த போது எமது இயக்கம் தள்ளாடிய தெனினும் ஒருதலைவனை அழிப்பதன் மூலம் அவ்வியக்கத்தை அழித்துவிட முடியாதென்ற எம் தலைவனின் பொய்யாமொழியை மெய்யாக்க நாம் தமிழீழமக்கள்விடுதலைக்கழகத்துடன் உடன்பாட்டு நிலையில் எங்களை பரஸ்பர தோழமை இயக்கங்களாக வரித்துக்கொண்டோம். இதன் மூலமே நமது இயக்கம் இந்தளவுக்கு முற்போக்கு தனத்தையும் முன்னேற்றத்தையும் அடைந்தது என்பதை சகல விடுதலை இயக்கங்களும் உணரும் சிலர் விமர்சனம் செய்யுமாப்போல் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் பிரிவு போன்றதே T E. L. A என்பதெல்லாம் வெறும் பொய்களே. தமிழீழ விடுதலை இராணுவம் தனது தனித்துவத்தை என்றென்றைக்குமே விட்டு கொடுக்க போவதில்லை. ஏனெனில் ஒபரோய் தேவனால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் தோழர் "**காஸ்ரோ**" தலைமையிலான இயக்கம். அவர்தான் இதன் உண்மை தலைவர். அவரை மீட்டெடுக்கும் வரையில் புதிய நிர்வாகத்தின் கீழ் (இதிலும் அவர்தான் தலைவர்) இயக்கத்தை பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று உறுதி கூறுகிறோம் இந்த புதிய நிர்வாகத்தில் காஸ்ரோ திரும்பவும் வரும் வரையில் இராணுவப் பிரிவுத் தலைவர் அரசியற்பிரிவுத் தலைவர் ஆகிய இவரும் அவரது பொறுப்புகளை பங்கேற்று தொண்டாற்றுவர்.

தலைவர் தேவனின் மரணத்திற்கு என்றுமே நாம் பழிவாங்க சபதமேற்றதில்லை. ஆயினும் அது பிழையானது என்பதை சம்பந்தப் பட்டவர்கள் பகிரங்கப் படுத்த வேண்டும். அதுவரையில் சம்பந்தபட்டவர்ட்கும் எமக்கும் உடன்பாடு இருக்க முடியாது.

இந்நிகழ்ச்சிகளையிட்டு எம்மியக்கம் தனது ஆழ்ந்த துக்கத்தை வெளிப் படுத்துகிறது.

**தமிழீழ விடுதலை ராணுவம்**
**அரசியல் பிரச்சாரப் பிரிவு**

Published and printed by TELA, BM Box 9650, London WC1N 3XX

படிப்பகம்